Printed Matter

MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only

# நல்லாயரே
# நாமவிழா
# நல்வாழ்த்துக்கள்



ஜுன்
29

To

BOOK POST

If Undeliveried please return to ...
Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165
Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852

# Bulletin
## Diocese of Marthandam
## மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்




# திருத்தூதர் நோன்பு (பதிமூன்று நோன்பு)
ஜுன் 16 முதல்
28 வரை

மலர் 20 மே 2023 இதழ் 05

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 03.06.2023 | Saturday | 8.30 am | Orientation Class For First Year Theologians<br>Vespers | Catholicate Centre<br>Thirithuvapuram |
| 04.06.2023 | Sunday | | Jubilee Mass | Annakarai |
| 05.06.2023-09.06.2023 | Monday - Friday | | Retreat | St. Paul's Trichy |
| 11.06.2023 | Sunday | Evening | Centenary Celebration | Tuticorin |
| 12.06.2023 | Monday | 6.00 pm | Cathedral Finance Council Meeting | Bishop's House |
| 18.06.2023 | Sunday | <br>2.30 pm | Church Day<br>Pastoral Council Meeting | Pullani<br>Bishop's House |
| 25.06.2023 | Sunday | | Holy Mass | Mathoorkonam |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

MARTHANDAM DIOCESAN BULLETIN

மலர். 20 ஜூன் 2023 இதழ். 6

THE MALANKARA SYRIAN CATHOLIC CHURCH

## BULLETIN OF THE DIOCESE OF MARTHANDAM

*PATRON*

***His Excellency Most Rev. Vincent Mar Paulos***

*EDITOR*

***Rev. Fr. Franklin Jose***
***The Chancellor***

*COVER DESIGN*

***Mrs. Uni Kumari B.***

*PRINTING*

***Santhom Press,***
***Marthandam***

*PUBLISHED BY*

***The Chancellor***
***Diocese of Marthandam***



மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருஅவை
2023-ஆம் ஆண்டு பொதுநிலையினர் தினத்தை முன்னிட்டு
ஆயர் மாமன்ற பணிக்குழு தலைவர்
**மேதகு ஆயர் ஜோசுவா மார் இக்கினாத்தியோஸ்**
வழங்கும் மேய்ப்பு மடல்

## பொதுநிலையினர் தினம் 2023

*மதிப்பிற்குரிய ஆயர்களே, கோர் எப்பிஸ்கோப்பாமார்களே, றாம்பான்மார்களே, குருக்களே, துறவிகளே, இறையேசுவில் அன்புமிக்க சகோதர சகோதிரிகளே,*

மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவையானது மே மாதம் 7-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை பொதுநிலையினர் தினத்தை கொண்டாடுகிறது. பொதுநிலையினரின் அழைப்பும் பணியும் குறித்து ஆய்வு செய்யும் இந்நாளில் அனைவருக்கும் மன்றாட்டு கலந்த வாழ்த்துக்களை சிறப்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

திருத்தந்தை 12-ம் பத்திநாதர் பொதுநிலையினரை குறித்து சொன்னவை குறிப்பிடத்தக்கவை : "பொதுநிலையினரான நம்பிக்கை யாளர்கள் திருஅவை வாழ்வின் முன் வரிசையில் நிற்பவர்கள். அவர்களை பொறுத்தவரையில் மனித சமூகத்தை உணர்ந்தெழச் செய்வது திருஅவையே. எனவே தாங்கள் திருஅவையை சார்ந்தவர்கள் என்பதை விட தாங்களே திருஅவை என்னும் உணர்வு அவர்களில் மேலோங்கி நிற்க வேண்டும். திருஅவையின் தலைவராகிய திருத்தந்தையுடன், நல்லுறவில் பணி செய்யும் ஆயர்களின் தலைமையில் புவியில் செயல்படும் நம்பிக்கையாளர்களின் சமூகமே திருஅவை" (AAS 38 (1946) 146).

பொது நிலையினரின் பங்கேற்பும் கூட்டு பொறுப்பும் திருஅவையின் பங்கேற்பை பொருள் செறிந்ததாக மாற்றுகிறது. பொதுநிலையினர், குருக்கள் குழுமம் என்ற பாகுபாடு பாராமல் தோழமை பாராட்டி திருஅவையை பார்ப்போமானால் பொதுநிலையினருக்கு திருஅவையில் சிறந்த பங்கேற்பு உருவாகும்.

பொதுநிலையினர் தங்கள் பணிகடமைகளை செயல் தளங்களில் செயல்பாடுகள் வழியாக நிறைவேற்ற வேண்டும். குடும்பம், கல்வி கூடம், இயக்கங்கள், தொழில் துறைகள், அரசியல் போன்றவை பொதுநிலையினரின் பணித்தளங்களாக உள்ளன. திருஅவையின் திருநிலையிலுள்ளவர்களுக்கு கடந்து செல்ல இயலாத இடங்களில் செயல்பட பொதுநிலையினர் சிறப்பு அழைப்பு பெறுகின்றனர். நம்பிக்கையாளர்கள் ஆலயத்திற்கு வெளியே கடந்து சென்று எல்லாத் துறைகளிலும் கிறிஸ்துவுக்கு சான்று பகிர்கின்றனர்.

பங்கின் அடிப்படை அலகுகளாகிய அருள்வாழ்வியங்கள், பங்கின் பல்வேறு அமைப்புகள் போன்றவை பொதுநிலையினரை ஆற்றல்படுத்துவதற்கும் திருஅவை திருப்பணிகளில் அவர்கள் பங்கேற்பதற்கும் சிறந்த ஒரு வாய்ப்பை திறந்து கொடுக்கின்றது. திருஅவையிலுள்ள பல்வேறு பங்கேற்பு அமைப்புகள் திருஅவையின் வளர்ச்சிக்கும் நம்பிக்கை சமூகத்தின் நன்மைக்கும் உதவுகின்ற செயல்பாடுகள், பொதுநிலையினரை, திருஅவையின் பல்வேறு தளங்களில் செயல்படுபவர்களாக மாற்றுகிறது.

திருஅவையின் செயல்தளங்கள் அதன் இணைந்த பயணத்தில் பொதுநிலையினரின் பங்கேற்பை உறுதிப்படுத்துகிறது. தேசிய அளவிலும் மண்டல அளவிலும் பொதுநிலையினரான ஆண்கள், பெண்கள் ஆகியோரின் ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் வளரச் செய்ய கூட்டுடொருங்கியத் திருஅவையை குறித்தான சிந்தனைகள் உதவுகின்றன. நம்பிக்கை வாழ்வின் கடமைகளை ஆலய சடங்குகளில் ஒதுக்கி சமூக அரசியல் தளங்களுக்கு வரும்போது நம்பிக்கைக்கு எதிரான சித்தாந்தங்களையும் அணுகுமுறைகளையும் உள்வாங்கி செயல்படும் நிலைக்கு சில பொதுநிலையினர் வழுக்கி வீழ்ந்துள்ளனர். சமூக மற்றும் அரசியல் துறையில் நீதி, நேர்மைக்காக குரல் கொடுத்து செம்மைபடுத்தும் ஆற்றலாக செயல்பட பொதுநிலையினர் விழிப்புணர்வு அடைய வேண்டும் என்பது இன்றைய சூழலில் ஒரு சவாலாக திருஅவை முன் உள்ளது. இந்திய திருஅவை இன்னும் சில நாட்களில் இடையூறுகளையும் இக்கட்டுகளையும் சந்திக்கலாம். இதை புரிந்துக் கொள்ள இந்தியாவில் மாறிவரும் அரசியல் சமூக தளங்களை குறித்து திருஅவையின்



பொதுநிலையினரும் ஆழமாக ஆய்வு செய்ய வேண்டும். நாட்டின் வேற்றுமை கலந்த ஒற்றுமையும், மதச்சார்பின்மையும் உள்வாங்கிய அரசியல் பார்வை உதயமாக வேண்டும். அரசியல் அதிகாரம் நீதி நேர்மையுடன் கையாளப்பட வேண்டுமென்று ஆட்சியாளர்களை நினைவுப்படுத்தவும், அறநெறி படிப்பினைகள் பொது நன்மைக்கு உதவுகிறது என உறுதிப்படுத்தவும் பொதுநிலையினருக்கு இயல வேண்டும். காலத்தின் பிரச்சனைகளை கண்டறிந்து பதில் கொடுக்கவும், காலத்தின் அறிகுறிகளை புரிந்து கொண்டு செயல்பட திறன் வாய்ந்த பொதுநிலையினருக்கு மட்டுமே இக்கட்டான சூழல்களில் திருஅவையின் குரலாக ஒலித்து ஆற்றல் பகிர முடியும்.

மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருஅவையின் நம்பிக்கை நட்சத்திரங்களான இளையோர் மீது நம் பார்வை பதிய வேண்டும். உயர் கல்வி துறையில் ஏற்படும் குழப்பங்களும், தொழில் வாய்ப்புகள் கிடைக்காத அல்லல்களும், மாநகரங்களில் காணப்படும் பாதுகாப்பற்ற சமூக நிலைகள் இளையோர்களை அச்சுறுத்துகிறது. பங்கிலிருந்து கற்றுக்கொண்ட நன்மைகளும், திருஅவையுடன் இணைந்து பயணித்து கற்றுக்கொண்ட பழக்க வழக்கங்களும் வாழ்வில் இழந்துவிட நேரிடலாம். திருஅவையும் திருவழிபாட்டையும் நேசிக்கும் இளையோர் சமூகத்தை உருவாக்கம் செய்ய மலங்கரையில் பக்குவமான திருஅவையின் சான்றோர்களுக்கு இயல வேண்டும்.

பங்கின் அனுதின செயல்படுகளில் பொதுநிலையினர் சிறப்பாக பங்கேற்கின்றனர். மறைக்கல்வி, பக்த இயக்கங்கள், நற்செய்தி சங்கம், சமூக சேவை போன்ற துறைகளில் பொதுநிலையினர் திருஅவையோடு இணைந்து செயல்படுகின்றனர். அனைவருக்கும் இதயமொழியில் நன்றி கூறி பாராட்டுதல் தெரிவித்துக் கொள்கிறேன்.

மலங்கரை கத்தோலிக்கத் திருஅவையில் பொதுநிலையினர் தினம் ஒரு திருஅவையின் பொது விழாவாக கொண்டாடப்படுகிறது. MCA, MCYM, தாய்மார் சங்கம், வின்சென்ட் தே பவுல் சங்கம், மரியாயின் சேனை, தந்தையர் சங்கம் போன்ற இயக்கங்கள் இணைந்து இந்த தினத்தை கொண்டாட வேண்டும். திருஅவையின் வளர்ச்சிக்கும் சமூகத்தின்

முன்னேற்றத்திற்குமாக பொதுநிலையினர் இயக்கங்கள் வழங்கும் ஒத்துழைப்பை நான் நன்றியுடன் நினைவு கூர்கின்றேன். நற்செய்தி சங்கம் வாயிலாக நம் சகோதர சகோதரிகள் வழங்கும் சான்று வாழ்வின் ஆன்ம அற்பணம் நம்மை வியக்க வைக்கிறது. கேரளா மாநிலத்திற்கு வெளியே உள்ள திருஅவை பணி தளங்களில் குறிப்பாக நற்செய்தி அறிவிப்பு பணி தளங்களில் இல்லங்களை மையமாக கொண்ட இறைபணி செய்வதில் பொதுநிலையினர் காட்டும் கடமையுணர்வு பாராட்டுதலுக்குரியது. வெளிநாட்டு வாழ்க்கையின் குறைகளையும் துன்பங்களையும் பொருட்படுத்தாமல் மறைத்தூதுபணி ஆர்வத்தால் நிறைந்து காணப்படும் சகோதர சகோதரிகள் திருஅவையின் ஒளிர்கின்ற சான்று பகிரும் செயல் வீரர்களாக உள்ளனர். வெளிநாட்டு வாழ்விலும் கடின உழைப்பிலும் கிடைக்கும் ஊதியத்தின் ஒரு பகுதியை திருஅவையின் இரக்கச் செயல்களுக்காக ஒதுக்கி வைக்கும் சகோதரர்களை நான் நன்றியுடன் நினைக்கிறேன். பொதுநிலையினர் தினத்தில் திருப்பலி மத்தியில் சேகரிக்கும் காணிக்கை திருஅவையில் பொதுநிலையினர் பணிகளுக்காக பயன்படுத்தி வருகிறோம். அன்றைய தினம் அனைவரும் தாராள மனதுடன் காணிக்கை வழங்கி ஆசீர் பெற அன்புடன் அழைக்கிறேன். நமது திருஅவையின் தனிசட்டம் எண் 601-ன் படி இந்த காணிக்கையை பங்கு தந்தையர்கள் சேகரித்து மறைமாவட்ட நிதி அலுவலருக்கு அனுப்ப கேட்டு கொள்கிறேன். நிதி அலுவலர் இதன் ஒரு பகுதியை மறைமாவட்ட செயல்பாடுகளுக்கும், ஒரு பகுதியை நமது திருஅவையின் தலைமை செயலக நிதி அலுவலரிடம் ஒப்படைக்கவும் வேண்டும். பொதுநிலையினரின் விண்ணக பாதுகாவலராகிய தூய சூசையப்பர் நமக்காக பரிந்துரை செய்வராக.

உயிர்த்த ஆண்டவர் உங்கள் திருப்பணிகளை வாழ்த்தி ஆசீர்வதிப்பாராக.

✝ மேதகு ஜோசுவா மார் இக்னாத்தியோஸ்
பொதுநிலையினரின் ஆயர்
மாமன்றத்திற்கான பணிக்குழு தலைவர்
மாவேலிக்கரை மறைமாவட்ட ஆயர்

காதோலிகேட் மையம்
பட்டம், திருவனந்தபுரம்,



**Most Rev.Vincent Mar Paulos**
Bishop of Marthandam

Bishop's House
Marthandam
K.K.Dist 629 165

Cir.No.3/2023 29.04.2023

# CIRCULAR

***கிறிஸ்துவில் அன்புநிறை அருட்தந்தையர்களே, அருட் சகோதரர்களே, அருட்கன்னியர்களே, இறைமக்களே,***

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது மணமகளாம் திருஅவையை நிறுவி அதனை திருமுழுக்கினாலும் மற்றும் திருவருட்சாதனங்களாலும் மறைசாட்சிகளின் எலும்புகளாலும், திருப்பலிபீடத்தினாலும் அழகுபடுத்தினார். திருத்தூதர் மற்றும் இரத்தசாட்சிகளின் இரத்தத்தாலும் அத்திருஅவையை வளப்படுத்தினார். சாகாமையை அருளுகின்ற அருமருந்தாகிய திவ்விய நற்கருணையை நிறுவி அதனை வேளாவேளை பரிமாறும் பொருட்டு குருத்துவத்தை ஏற்படுத்தினார். குருவானவர்களாலும் திருத்தொண்டர்களாலும் ஆயர்களாலும் திருஅவையை துலங்கச் செய்தார். அவரோடு உரையாடி மகிழ விரும்புவோர் திருஅவையில் வரவேண்டுமென்று விரும்பினார். இந்த சிந்தனைகளை ஞாயிறு இரவு ஜெபம் ஒன்றாம் கௌமா நமக்கு விளக்கித் தருகிறது.

ஆண்டவர் இயேசுவில் நிறைவேறிய மீட்புச் செயலின் பலனை இறைமக்கள் சமூகம் சொந்தமாக்கி கொள்ள குருவானவர்கள் ஆண்டவரின் கருவிகளாக செயல்படுகின்றனர். குருத்துவத்தின் அருள் பெருமையை கண்டறிந்த திருஅவை சமூகம் ஒரு குருவை காணும் போது இயேசுவுக்கே புகழ் என்று இருகரம் கூப்பி வணங்கும் வழக்கம் நம்மிடையே இருந்துள்ளது. குருத்துவ திருநிலையிலுள்ளோர்க்கு இடறல்கள் ஏற்படலாம். ஆனால் குருத்துவத்தின் அழகு ஒரு போதும் தோய்ந்து போவதில்லை.

தொடக்க திருஅவையில் கிறிஸ்தவ நம்பிக்கை நகரங்களை மையமாகக் கொண்டு வேரூன்றி வளர்ந்தது. தொடர்ந்து கிராமாபுறங்களிலும் கிறிஸ்தவம் வளர்ந்தது. நம்பிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த போது அவர்களுக்கு திருத்தூதுவ திருப்பணிகள் கிடைக்கும் பொருட்டு மறைமாவட்ட ஆயர்கள் கிராமப்புறங்களில் ஆயர்களை நியமனம் செய்ய தொடங்கினர். அவர்கள் கோர் எப்பிஸ்கோப்பாமார்கள் என அழைக்கப்பட்டனர். திருஅவை துரிதமாக வளர்ந்த போது புதிய மறைமாவட்டங்களும் புதிய மறைமாவட்ட

ஆயர்களும் அதிகமாக தோன்றினர். அதன் விளைவாக கோர் எப்பிஸ்கோப்பாமார்களின் முக்கியத்துவம் குறைந்தது. ஆனால் தூய ஆவியின் தூண்டுதலால் வரலாற்றில் குறிப்பிட்ட காலத்தில் தோன்றிய இத்திருநிலையை திருஅவையின் பாரம்பரியத்தோடு இணைத்து திருஅவை பாதுகாத்தது. இன்று திருஅவையில் கோர் எப்பிஸ்கோப்பா பதவி திருஅவை சார்ந்த அதிகாரங்களுள்ள பதவியாக கருதப்படுவதில்லை. மாறாக, திருஅவையில் ஒரு குருவானவர் பல்வேறு பங்குகளிலும், பணித்தளங்களிலும் ஆற்றிய குருத்துவ திருப்பணியை பாராட்டி திருஅவை வழங்கும் பதவி பெயராகும். திருஅவையில் தனிநபர்களுக்கு வழங்கப்படும் பதவிகள் புது அற்பணத்திற்கும் ஜெபத்திற்குமாக வழங்கப்படுகிறது. கடவுளின் மகிமைக்கும் திருஅவையின் முன்னேற்றத்திற்கும் இறைமக்களின் வளர்சிக்குமாக குருக்கள் கோர் எப்பிஸ்கோப்பா பதவிகளில் நியமிக்கபடுகின்றனர்.

மலங்கரை கத்தோலிக்கத் திருஅவையில் மார்த்தாண்டம் மறைமாவட்டத்தில் முதன் முறையாக இறைவனுக்கும் இறைமக்களுக்குமாக திருப்பணி செய்து வருகின்ற இரண்டு குருக்களுக்கு இப்பதவி பெயரை வழங்குவதில் பேருவகை கொள்கின்றேன். மார்த்தாண்டம் மறைமாவட்டம் பரிந்துரை செய்ததன் அடிப்படையில், ஆயர் மாமன்றத்தின் ஒப்புதலுடன் நமது திருஅவையின் தந்தையும் தலைவருமாகிய மோறான் மோர் பசேலியோஸ் கிளீமிஸ் காதோலிக்கா பாவா அவர்கள் இப்பதவியை வழங்கி ஆணையிட்டுள்ளார்கள். நமது மறைமாவட்டத்தில் 43 ஆண்டுகளாக குருத்துவ திருப்பணியை செய்துவரும் பேரருட்தந்தை ந. வர்கீஸ் அவர்களுக்கும், 39 வருடங்களாக குருத்துவ திருப்பணியை செய்து வரும் பேரருட்தந்தை பிரேம் குமார் அவர்களுக்கும் கோர் எப்பிஸ்கோப்பா என்னும் பதவி பெயர் வழங்கி திருஅவை மகிழ்கிறது. இப்பதவி பெயர் வழங்கும் திருச்சடங்கு மே மாதம் 20-ம் தேதி காலை 8.00 மணிக்கு நமது பேராலயத்தில் வைத்து மறைமாவட்ட ஆயரின் தலைமையில் நடைபெறும். திருப்பலி மத்தியில் வழங்கப்பட உள்ளது. அனைவரும் வருகை தந்து ஜெபிக்கவும், புதிய கோர் எப்பிஸ்கோப்பாமார்களை பாராட்டவும் அன்புடன் அழைக்கின்றேன்.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

*அன்புடன்,*



**† மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ்**

மார்த்தாண்டம் மறைமாவட்டம்



# குருக்கள் செய்தி

## குருக்கள் தியானம்

இம்மாத குருக்களுக்கான தியானம் 08-05-2023 அன்று ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இத்தியானத்தை அருட்தந்தை ஜெலஸ்டின் ஜெறால்ட் (குழித்துறை மறைமாவட்டம்) அவர்கள் வழிநடத்தினார்கள். தொடர்ந்து மறைமாவட்ட முதன்மைகுரு மோண் ஜோஸ் பிறைட் அவர்களின் நாமவிழா கொண்டாடப்பட்டது. எல்லா அருட்தந்தையர்களின் பிரதிநிதியாக பேரருட்தந்தை மைக்கிள் முக்கம்பாலத் அவர்கள் வாழ்த்துரை கூறினார்கள். இந்நிகழ்வை தொடர்ந்து ஆயரின் அருளுரையோடு அன்றைய நிகழ்வுகள் நிறைவடைந்தன.

## கோர் எப்பிஸ்கோப்பா பதவிபெயர் வழங்குதல் நிகழ்வு

நம் மறைமாவட்டத்தில் பேரருட்தந்தை S. வற்கீஸ் மற்றும் பேரருட்தந்தை பிறேம் குமார் அவர்களுக்கு கோர்எப்பிஸ்கோப்பா என்ற பதவி பெயர் வழங்கும் திருச்சடங்கு 20-06-2023 அன்று மார்த்தாண்டம் கிறிஸ்து அரசர் பேராலயத்தில் வைத்து நடைபெற்றது. திருப்பலியுடன் இந்நிகழ்வு ஆரம்பமானது. திருப்பலியை மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையேற்று நடத்தினார்கள், திருப்பலியின் இறுதியில் கோர்எப்பிஸ்கோப்பா என்ற பதவி பெயர் வழங்கும் திருச்சடங்குகள் நடைப்பெற்றன. இந்நிகழ்வுகளின் சிறப்பு விருந்தினர்களாக நம் மறைமாவட்ட முன்னாள் ஆயர் மேதகு யூஹானோன் மார் கிறிஸோஸ்டோம் அவர்களும், திருவனந்தபுரம் துணை ஆயர் மேதகு போளிகார்பஸ் ஆண்டகை அவர்களும், கோர்எப்பிஸ்கோப்பாமார்கள், றம்பான் பேரருட்தந்தை பிலிப்பு தயானந்த், குழித்துறை மறைமாவட்ட தொடர்பாளர் பேரருட்தந்தை ஏசு ரத்தினம், பெதனி துறவற சபை தலைவர் பேரருட்தந்தை மத்தாய் கடவில் OIC, DM Mother General, Mother லிடியா, அருட்தந்தையர்கள், அருள்சகோதரிகள், அருள்சகோதரர்கள் மற்றும் இறைமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

# மேரி மக்கள் துறவற சபை

### புனித சூசையப்பர் தினம் கொண்டாட்டம்

மே மாதம் 1-ம் தேதி புனித சூசையப்பர் தினத்தையொட்டி சூசையப்பர் மாகாணம் மார்த்தாண்டத்தில் வைத்து காலை 10 மணிக்கு சிறப்பு ஜெபமும் அதனை தொடர்ந்து பேரருட்தந்தை S. வற்கீஸ் அவர்களின் தலைமையில் திருப்பலியும் நடைபெற்றது. சூசையப்பர் மாகாண அருட்சகோதரிகள் அனைவரும் அதில் சிறப்பாக கலந்து கொண்டனர்.

### இளம் அருட்சகோதரிகளுக்கு வார்த்தைபாட்டை புதுப்பித்தல்

மேரிமக்கள் துறவற சபையில் சூசையப்பர் மாகாணத்தின் இளம் அருட்சகோதரிகளுக்கான வார்த்தைப்பாடு புதுப்பித்தல் திருச்சடங்கு மே மாதம் 5-ம் தேதி காலையில் மோண்சிஞ்ஞோர் ஜோஸ் பிறைட் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதில் 19 இளம் அருட்சகோதரிகள் தங்களுடைய வார்த்தைப்பாட்டை புதுப்பித்துக் கொண்டனர். இவர்களுக்கான தியானத்தை அருட்தந்தை இன்னாசி முத்து OCD அவர்கள் வழிநடத்தினார்கள்.

### புது குருக்களுக்கு வரவேற்பு

மார்த்தாண்டம் மறைமாவட்டத்திற்காக இந்த வருடம் குருத்துவ அருட்பொழிவு பெற்ற அருட்தந்தையர்கள் அஜீஷ், அனீஷ், சில்ஜின், விபின் ராஜ், ஸ்டீபன் ஜோண் ஆகியோருக்கு மேரிமக்கள் துறவற சபையின் சார்பாக 11.05.2023 அன்று சிறப்பு வரவேற்பு மார்த்தாண்டம் மாகாணத் தாய் இல்லத்தில் வைத்து கொடுக்கப்பட்டது. புது குருக்கள் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். அதை தொடர்ந்து மதர் அனிலா கிறிஸ்டி அவர்கள் வரவேற்று வாழ்த்தி பேசினார்கள்.

### துறவற வாழ்வில் 25 வருட துவக்க விழா

மேரி மக்கள் துறவற சபையில் வெள்ளி விழா காணும் அருட்சகோதரிகளின் வெள்ளிவிழா தொடக்க நிகழ்வானது 12.05.2023 அன்று காலையில் மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் திருப்பலி நிறைவேற்ற துவங்கி வைத்தார்கள். அருட்சகோதரி றிஜோய்ஸ் மற்றும் அருட்சகோதரி ஷெர்லி சேம் ஆகிய இருவரும் ஒளியேற்றி வெள்ளிவிழா ஆண்டிற்குள் நுழைந்தார்கள். மேதகு ஆயர் அவர்கள் வாழ்த்துக்கள் கூறி வெள்ளி விழா ஆண்டை துவங்கி வைத்தார்கள்.



# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

### ஒருங்கிணைந்த திறன் வளர் பயிற்சி முகாம்

தளிர்கள் உலக திட்டத்தில் பயன்பெற்று வரும் பயனாளிகள் மற்றும் மறைமாவட்ட பங்குகளில் 9-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை படித்து வரும் மாணவ மாணவிகளுக்கு மறைமாவட்ட அளவிலான திறன் வளர்த்தல் பயிற்சியானது மிட்ஸ் அரங்கத்தில் வைத்து 06.05.2023 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமையேற்று மாணவர்களுக்கு பயிற்சியின் முக்கியத்துவம் மற்றும் உயர்கல்விக்கான வழிகாட்டுதல்களை வழங்கி மாணவ மாணவிகளை ஊக்கப்படுத்தினார்கள். பின்னர் மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியின் பேராசிரியர் திரு. லியோ பிறைட் சிங் அவர்கள் மாணவர்களுக்கு வேலை வாய்ப்புகள் அதிகம் உள்ள பாடப்பிரிவுகள் மற்றும் அவற்றின் முக்கியத்துவத்தையும், வெற்றியாளர்களாக மாறுவதற்கான படிநிலைகள் என்னென்ன என்பது குறித்து பயிற்சியளித்தார்கள். இந்த பயிற்சியானது மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாக மாணவர்கள் கருத்து தெரிவித்திருந்தனர். காலை 10 மணி முதல் மாலை 3.30 மணி வரை நடைபெற்ற இந்த பயிற்சியில் 162 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

### உதவித்திட்டங்கள்

1. 02.05.2023 அன்று மிட்ஸ் உறுப்பினர் பாதுகாப்பு திட்டத்தின் வழியாக மிட்ஸ் சுய உதவி குழுக்களில் இருந்து இறந்து போன இரண்டு உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூபாய் 20,000/- இறப்பு நிதியாக வழங்கப்பட்டது.
2. 05.05.2023 அன்று CTWWC திட்டத்தில் உள்ள 80 பயனாளிகளின் குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்துக்கு 5 கோழிகள் வீதம் 400 கோழிகள் வழங்கப்பட்டன.
3. 17.05.2023 அன்று மிட்ஸ் ஜீவன் திட்டத்தின் வழியாக புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சுய உதவிகுழு உறுப்பினர் ஒருவரின் மருத்துவ செலவிற்கு ரூபாய் 5000/- வழங்கப்பட்டது.

### பிற நிகழ்வுகள்

1. 28.04.2023 அன்று CTWWC திட்டம் சார்பாக கோட்டார் சமூகப்பணி மையத்தில் வைத்து உளவியல் சமூக ஆதரவு மற்றும் அரையாண்டு திட்ட ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் CTWWC திட்ட பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

2. 10.05.2023 அன்று நான்கு மறைமாவட்டங்களுக்கான CTWWC திட்டத்தின் திட்டமிடுதல் கூட்டம் கோட்டார் சமூக பணி மையத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தில் மறைமாவட்ட ஆயர்கள், முதன்மைகுருக்கள், CRS இயக்குநர் திரு. செந்தில்குமார், மற்றும் பணியாளர்கள், CTWWC திட்ட அலுவலர்கள், பொறுப்பாளர்கள் மற்றும் CCI பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

3. 11.05.2023 அன்று CTWWC திட்டத்தின் சார்பில் கோட்டார் சமூக பணி மையத்தில் வைத்து நடைபெற்றிட Planning and mapping of livelihood and CSR opportunities in Kanyakumari District கூட்டத்தில் CTWWC திட்ட பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## HEALTH FOR ONE MILLION (HOM)
### Diocese of Marthandam

தமிழ்நாடு ஆயர் பேரவையின் நலவாழ்வு மேம்பாட்டு ஆணையம் மற்றும் HOM சார்பாக மேய் 7-ம் தியதி சிவலோகம் மற்றும் கணபதிக்கல் பங்குகளில் வைத்து நடைபெற்ற 'நமது இதயம் காப்போம்' என்ற சிறப்பு நிகழ்வில், தமிழ்நாடு ஆயர் பேரவையின் நலவாழ்வு மேம்பாட்டு ஆணைய செயலர் அருட்சகோதரி ஜோஸ்பின் அவர்களால் 'நமது இதயம் காப்போம்' என்ற தலைப்பில் விழிப்புணர்வு கருத்துரை நடைபெற்றது. இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை HOM இயக்குநர் அருட்தந்தை ராபர்ட் மற்றும் பங்கு பேரவை உறுப்பினர்கள் இணைந்து செய்தனர்.

HOM சுய வாழ்வாதார மேம்பாட்டு திட்டத்தின் வாயிலாக நாகர்கோவில், கன்னியாகுமரி ஆகிய அலகுகளைச் சார்ந்த 25 சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு ஆடு வளர்ப்பதற்கான நிதிஉதவி வழங்கப்பட்டது.



# மலங்கரை கத்தோலிக்க கல்லூரி மரியகிரி

### 1. பட்டமளிப்புவிழா

2020 மற்றும் 2021-ம் ஆண்டில் இளங்கலை மற்றும் முதுகலையில் தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழாவானது கல்லூரி அரங்கில் வைத்து 11.04.2023 அன்று நடத்தப்பட்டது. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழக துணைவேந்தர் முனைவர் சந்திரசேகரன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு 515 மாணவமாணவியருக்கு பட்டமளித்து சிறப்புரையாற்றினார்கள். கல்லூரிதாளாளர் அருட்தந்தை அருள்தாஸ், முதல்வர் முனைவர் தம்பிதங்ககுமரன், நிதிகாப்பாளர் அருட்தந்தை வினு இம்மானுவேல் மற்றும் துறைசார்ந்ததலைவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

### 2. கலைவிழா

12.04.023 அன்று கல்லூரியின் கலைவிழாவானது மிகவிமர்சையாக நடத்தப்பட்டது. புனித எப்ரேம் இளங்குருமட அதிபர் பேரருட்தந்தை ஜோசப் சுந்தரம் அவர்கள் கலந்துகொண்டு மாணவர்களின் கலைத்திறனை எடுத்துக்காட்டியதோடு கலைவிழாவின் நிகழ்வினை துவங்கி வைத்தார்கள். நடிகரும் நகைச்சுவையாளருமான திரு. மதுரைமுத்து அவர்கள் சிறப்புவிருந்தினராக கலந்துகொண்டார்கள். பல்வேறு விதமான போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகளும் கேடயங்களும் வழங்கப்பட்டன.

### 3. ஆண்டுவிழா

கல்லூரியின் 25-வது வெள்ளிவிழா கொண்டாட்ட நிகழ்வுகள் 13.05.2023 அன்று மிகவிமர்சையாக நடத்தப்பட்டது. கல்லூரியின் மேலாளர் மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் அனைவரையும் வரவேற்று விழாவினை துவங்கி வைத்தார்கள். சிறப்பு விருந்தினராக சிறுபான்மையினருக்கான அமைப்பின் தலைவர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்

கலந்துகொண்டு 'பெண்களின் கல்வி' எனும் மையக்கருத்தில் சிறப்புரையாற்றினார்கள். பெத்தேரி மறைமாட்ட ஆயர் மேதகு ஜோசப் மார் தோமஸ், மார்த்தாண்டம் மறைமாவட்ட முன்னாள் ஆயர் மேதகு யூஹானோன் மார் கிறிஸ்டோஸ்டம், கிள்ளியூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் திரு. ராஜேஷ் குமார், கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் திரு. விஜய் வசந்த், மணோன்மனியம் சுந்தரனார் பல்கலைகழக பதிவாளர் பொறுப்பு முனைவர் அண்ணாத்துரை, கல்லூரியின் முன்னாள் தாளாளரும் மறைமாவட்ட குருகுல முதல்வருமாகிய பேரருட்தந்தை ஜோஸ்பிறைட், குழித்துறை மறைமாவட்ட குருகுலமுதல்வர் பேரருட்தந்தை யேசுரத்தினம், மறைமாட்டகல்வி ஆலோசகர் அருட்சகோதரி ஏஞ்சல் திரேஸ், மெதுகும்மல் கிராம பஞ்சாயத்து தலைவர் திரு. சசிகுமார் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் திரு. மனோஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் முனைவர் தம்பி தங்ககுமரன் அவர்கள் ஆண்டறிக்கை வாசித்தார்கள். கல்லூரிதாளாளர் அருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்கள். வெள்ளிவிழாவினை முன்னிட்டு கல்லூரி நிறுவனர் நினைவில் வாழும் மேதகு ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் நினைவு சிலை நிறுவப்பட்டது. அனைத்து பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களுக்கு நினைவு பரிசுகளும் வழங்கப்பட்டது.

## திருமண ஆயத்தப்பயிற்சி

**ஜூன்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 16, 17 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.



# மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி கிராத்தூர்

**கலைவிழா 2023 (Arts Day)**

கிராத்தூர் மார்கிறிஸோஸ்டம் கல்வியியல் கல்லூரியில் 26-04-2023, 27-04-2023 ஆகிய இரண்டு நாட்கள் கலைவிழாவானது வெகுசிறப்பாக நடைபெற்றது. அருட்தந்தை. சிபி அவர்கள் மாணவர்களிடம் கலைத்துறை மற்றும் இதர நிகழ்வுகளிலும் சிறப்பாக செயல்படவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி விழாவிற்கு துவக்க உரையாற்றினார். பேரருட்தந்தை S. வர்க்கீஸ் அடிகளார் அவர்கள் தலைமை உரையாற்றி விழாவிற்கு தலைமை வகித்தார். இதனைத் தொடந்து மாணவ மாணவிகளுக்கான கலைப் போட்டிகள் நடைபெற்றது. பல மாணவ மாணவிகள் போட்டிகளில் திறம்பட கலந்துகொண்டு பரிசுகளை வென்றனர்.

**விளையாட்டுவிழா (Sports Day)**

கிராத்தூர் மார் கிறிஸோஸ்டம் கல்வியியல் கல்லூரியின் 16-வது ஆண்டு விளையாட்டு விழாவானது 28-04-2023, 29-04-2023 ஆகிய இரண்டு நாட்கள் எமது கல்லூரியில் வைத்து நடைபெற்றது. இந்த போட்டிகளானது காலை 10.00 மணியளவில் இறைவணக்கப் பாடலுடன் ஆரம்பமானது. செல்வி. ஜீனா ஜஸ்டின் அனைவரையும் வரவேற்றார். திருமதி. விமலா உடற்கல்வி ஆசிரியர் (மார் கிரிகோரியோஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கிராத்தூர்) கொடியேற்றி விளையாட்டு போட்டிகளை துவக்கிவைத்தார்.

**கல்லூரியின் 16–வது ஆண்டு விழா (College Day)**

கல்லூரியின் 16-வது கல்லூரி ஆண்டு விழாவானது 5-05-2023அன்று நடைபெற்றது. இந்த விழாவானது காலை 10.00 மணியளவில் இறைவணக்கப் பாடலுடன் ஆரம்பமானது. Rev. D. Vigil Samuesl M.A., BD(CSI Paster, CSI Pastorate Church, Nadaikkavu) அவர்கள் விழாவிற்கு தலைமையுரையாற்றினார். Mr. P.Vijayamohanan (Kollencode Municipality Councilor) கல்லூரி விழா முகவுரையினை வழங்கினார். முனைவர் பாசில் தீன் (PG Assistant, New HSC Nellimoodu, Kerala) அவர்கள் சிறப்புரையாற்றினார். சிறப்பு விருதுகளும், பாராட்டு விருதுகளும் வழங்கப்பட்டது.

**வளாகத் தேர்வு (Campus Interview)**

கிராத்தூர் மார் கிறிஸோஸ்டம் கல்வியியல் கல்லூரியில் வளாகத் தேர்வு 10-05-2023 அன்று காலை "EduNext education" Campus Placement" நடைபெற்றது. இந்த வளாகத் தேர்வில் இருபதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டார்கள். அதில் எட்டு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டது.

# MCA
## Diocese of Marthandam

மலங்கரை கத்தோலிக்க திருச்சபையில் உள்ள 10, 11 மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவர்களை ஊக்கப்படுத்தி, உயர் கல்வி மற்றும் உயர் பதவிகள் பற்றிய அறிவும் அவற்றை அடைவதற்கான வழிமுறைகள் வழங்க சபை அளவில் "Light 2023" என்ற நிகழ்வு இம்மாதம் 22, 23 மற்றும் 24 தேதிகளில் நாலாங்சிறை மார் இவானியோஸ் வித்யா நகரில் வைத்து நடைபெற உள்ளது. இதற்கான '25' மாணவர்களை நமது மறைமாவட்டத்தில் இருந்து தேர்வு செய்வதற்கான நுழைவுத்தேர்வு 01.05.2023 அன்று நமது 7 மறைமாவட்டங்களிலும் நடத்தப்பட்டது. இதில் 138 மாணவர்கள் கலந்து கொண்டனர். நமது மறைமாவட்டத்தில் உள்ள 10, 11 மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 06.05.2023 அன்று MIDS -வளாகம் கழுவன்திட்டையில் வைத்து MCA, MIDS மற்றும் St. Paul's IAS Academy இணைந்து ஒருங்கிணைந்த திறன் வளர்ச்சி பயிலரங்கம் மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகையின் சிறப்பு வகுப்புடன் நடத்தப்பட்டது. இதில் 118 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

நமது மறைமாவட்டத்தில் உள்ள பங்குகளில் 07.05.2023 அன்று MCA சார்பில் பொது நிலையினர் தினமானது சிறப்பிக்கப்பட்டது.

14.05.2023 அன்று குழித்துறை மேய்ப்புப் பணி வளாகத்தில் வைத்து MCA, மரியாவின் சேனை, வின்செண்ட் தே பவுல் சங்கம் மற்றும் தாய்மார் சங்கம் இணைந்து பொது நிலையினர் பணிக்குழு சார்பில் பொது நிலையினர் தினம் ஆயர் தலைமையில் கொண்டாடப்பட்டது.



# பொதுநிலையினர் பணிக்குழு
## மார்த்தாண்டம் மறைமாவட்டம்

### பொதுநிலையினர் தினவிழா

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தில் செயல்படும் மலங்கரை கத்தோலிக்க இயக்கம், தாய்மார் சங்கம், வின்சென்ட் தே பவுல் சபை மற்றும் மரியாயின் சேனைகள் இணைந்து பொது நிலையினர் சார்பில் பொது நிலையினர் தினவிழா சங்கமம் மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் 14.05.2023 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு குழித்துறை மேய்ப்பு பணி நிலைய வளாகத்தில் நடைபெற்றது. இறைவணக்கம் தாய்மார் சங்கம் (கிராத்தூர் பங்கு) சார்பில் பாட, MCA செயலாளர் திரு. K.C. பிரைட் அவர்கள் அனைவரையும் வவேற்றார்கள். தொடர்ந்து மேதகு ஆயர், அருட்தந்தை றாபின்சன், அருட்தந்தை G. வற்கீஸ், அருட்தந்தை அஜீஷ் ஜோகன், அருட்சகோதரி ஏஞ்சல் ஜோஸ் மற்றும் அனைத்து இயக்கங்களின் பொறுப்பாளர்கள் ஆகியோர்களால் ஒளியேற்றப்பட்டது. அனைத்து இயக்கங்களின் தொகுப்பறிக்கையை பொதுநிலையினர் பணிக்குழு செயலர் திரு. Y. வற்கீஸ் அவர்களால் சமர்பித்து ஒப்புதல் பெற்றார்கள்.

பொதுநிலையினரின் பணியும், வாழ்வும் என்ற தலைப்பில் சிறப்பான கருத்துரையை அருட்தந்தை அஜீஷ் ஜோகன் அவர்களால் தொகுத்து வழங்கப்பட்டது. மோண் ஜோஸ் பிரைட் அவர்கள் சிறப்பான வாழ்த்துரையை கவிதையாய் வழங்கினார். மேதகு ஆயரின் தலைமை உரையில் பொதுநிலையினருக்கு பங்களவில் மறைமாவட்ட அளவில் உள்ள கடமையும், பொறுப்பும் பற்றி சிறப்பாக எடுத்துக்கூறி செயல்பட கேட்டுக்கொண்டார்.

பொதுநிலையினரின் தன்னுடைய இளம் வயதுமுதல் தனது முதிர்ந்த வயதிலும் மறைப்பணியை சிறப்பாக மார்த்தாண்டம் மறைமாவட்டத்தில் செய்துவரும் திரு. கிறிஸ்டல் ஆன்டணி அவர்களை MCA சார்பில் கௌரவிக்கும் வகையில் மேதகு ஆயர் அவர்களால் பொன்னாடை போர்த்தி, கேடயமும் வழங்கினார்கள்.

தாய்மார்கள் சங்கம் சார்பில், ஒவ்வொரு மறைவட்டத்திற்கும் ஒரு நபர் என்ற வகையில் மருத்துவ உதவியை மேதகு ஆயர் அவர்கள் வழங்கினார்கள்.

மார்த்தாண்டம் மறைமாவட்ட MCA -ல் நீண்ட காலம் செயலராக பணியாற்றிய திரு. Y. வற்கீஸ் அவர்களுக்கு மேதகு ஆயர் அவர்கள் கேடயம் வழங்கி கௌரவித்தார்கள்.

தாய்மார்கள் சார்பாக கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டது. அனைத்து இயக்கங்களின் சார்பில் 300-க்கும் மேற்பட்ட பொதுநிலையினர் கலந்து கொண்டனர். அனைத்து இயக்கங்களையும் இணைத்து பொதுநிலையினர் தினவிழா நடைபெறுவது இதுவே முதல் முறையாகும். அனைத்து இயக்கங்களின் இயக்குநர்கள், பொறுப்பாளர்கள் இவ்விழா சிறக்க செயல்பட்டனர். MCA தலைவர் திரு. எட்வர்ட் ஜாண், தாய்மார் சங்க தலைவி திருமதி மினி, வின்சென்ட் தே பவுல் சபை தலைவர் திரு. இயேசுராஜன், மரியாயின் சேனை தலைவர் திரு. ஜெயபின் சர்மா, பொதுநிலையினர் பணிக்குழு செயலர் திரு. Y. வற்க்கீஸ் ஆகியோர்கள் அருட்தந்தை றாபின்சன் அவர்கள் தலைமையில் சிறப்பா ஏற்பாடுகள் செய்தனர். வின்சென்ட் தே பவுல் சங்க தலைவர் திரு. ஜேசுராஜன் அவர்கள் வருகை தநத் அனைவருக்கும் நன்றி கூற மேதகு ஆயரின் ஆசியுடன் விழா சிறப்புடன் முடிவடைந்தது.



## ஆயரின் மே மாத நிகழ்வுகள்



- 1 ➢ திருவல்லா மறைமாவட்டம் வாழக்குழி ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.
- 1 ➢ அடைக்காகுழி ஆலயத்தின் பொன்விழா நிறைவை முன்னிட்டு திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.
- 4 ➢ படந்தாலுமூடு ஆலயத்தில் வைத்து நடைபெற்ற பேராயர் ஜோசப் பௌவத்தில் அவர்களின் நினைவு பொதுக்கூட்டத்தில் பேராயரை பற்றிய நினைவலைகளை பகிர்ந்தார்.
- 5 ➢ ஆயர் இல்லத்தில் நடைபெற்ற மறைமாவட்ட பள்ளி தலைமையாசிரியர்களின் கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.
- 5 ➢ பாறசாலை மறைமாவட்டம் கண்ணறவிளை ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.
- 6 ➢ மிட்ஸ் அலுவலகத்தில் நடைபெற்ற Carrier Guidence நிகழ்வை துவங்கி வைத்து மாணவர்களுக்கு வழிகாட்டுதல் வழங்கினார்.
- 6 ➢ மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியில் வைத்து நடைபெற்ற Start up நிகழ்வின் நிறைவு விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.
- 7 ➢ அணக்கரை ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.
- 7 ➢ கிராத்தூர் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.
- 7 ➢ கருங்கலில் வைத்து நடைபெற்ற YMCA புது தலைமை பொறுப்பாளர் பாராட்டு விழா கூடுகையில் கலந்துக்கொண்டு வாழ்த்தினார்.

7 ➢ கிறிஸ்துவிளாகம் ஆலயத்தில் வைத்து நடைபெற்ற அருட்சகோதரி மரிய கிரேசி அவர்களின் துறவற வாழ்வின் 25 ஆண்டு ஜூபிலி நிறைவு விழா கூட்டத்திற்கு தலைமைத் தாங்கி வாழ்த்துரை வழங்கினார்.

8 ➢ ஆயர் இல்லத்தில் நடைபெற்ற கிறிஸ்தவ ஐக்கிய பேரவை கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

9 ➢ ஆயர் இல்லத்தில் நடைபெற்ற குருக்களின் மாதாந்திர தியானத்தில் கலந்துக்கொண்டு அறிவுரை வழங்கினார்.

10 ➢ கோட்டார் சமூக சேவை மையத்தில் நடைபெற்ற Tasos அமைப்பின் கூடுகையில் கலந்துக்கொண்டார்.

11 ➢ கிடாரக்குழி ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்

12 ➢ அருட்சகோதரி றிஜோய்ஸ் அவர்களின் துறவற வாழ்வின் 25 ஆண்டு ஜூபிலி தொடக்க நிகழ்வை முன்னிட்டு மார்த்தாண்டம் மாகாண இல்லத்தில் திருப்பலி நிறைவேற்றி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

12 ➢ பெருவிளை தூய தேவசகாயம் திருத்தலத்தில் புது கொடிமரத்தை அர்ச்சித்து அருளினார்.

12 ➢ மார்த்தாண்டம் புனித சூசையப்பர் மாகாணத்தில் வைத்து முதல் வார்த்தைப்பாடு வரவேற்பு திருச்சடங்கை தலைமையேற்று நடத்தி இறையாசீர் பொழிந்தார்.

13 ➢ மார்த்தாண்டம் புனித சூசையப்பர் மாகாணத்தில் திருப்பலி நிறைவேற்றி முதல் வார்த்தைப்பாடு திருச்சடங்கை தலைமையேற்று நடத்தி இறையாசீர் பொழிந்தார்.

14 ➢ கோணம் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

14 ➢ மேய்ப்புபணி நிலையத்தில் நடைபெற்ற பொதுநிலையினர் தின கூடுகைக்கு தலைமைத் தாங்கி சிறப்புரையாற்றினார்.

14 ➢ ஜார்ஜ்நகர் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.



15 ➢ அருமனை ஆலயத்தில் வைத்து நடைபெற்ற அருட்சகோதரி அற்சிதா அவர்களின் அர்ப்பண வாழ்வின் நன்றித்திருப்பலி மற்றும் வாழ்த்து கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார்.

16 ➢ திருவனந்தபுரம் பேராயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற Semiary Commission கூடுகையில் கலந்துக் கொண்டார்.

17 ➢ சேனம்விளை ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

18 ➢ பிலாங்காலை ஆலயத்தில் வைத்து நடைபெற்ற அருட்சகோதரி ஜெனிற்றா கரோலின் அவர்களின் அர்ப்பண வாழ்வின் நன்றித்திருப்பலி மற்றும் வாழ்த்து கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார்.

19 ➢ பின்குளம் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

20 ➢ மார்த்தாண்டம் பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இரண்டு அருட்தந்தையர்களுக்கு கோர்எப்பிஸ்கோப்பா பதவி பெயர் வழங்கும் திருச்சடங்கிற்கு தலைமைத் தாங்கினார்.

20-21 ➢ திருச்சி அருங்கொடை இல்லத்தில் சிறப்பு தியானத்தை வழிநடத்தினார்.

22 ➢ நாலாஞ்சிறையில் வைத்து நடைபெற்ற Light – 2023 நிகழ்வில் Self-discipline : Key to Success என்ற தலைப்பில் வகுப்பு எடுத்தார்.

23 ➢ சேரோட்டுக்கோணம் ஆலயத்தில் புதிதாக கட்யெழுப்பப்பட்ட குருசடியை அர்ச்சித்து திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

24 ➢ மார் எப்ரேம் இளம் குருமடத்தில் அருட்சகோதரர்களுக்கு இளநிலை மற்றும் திருத்தொண்டர் பட்டம் வழங்கினார்.

26-28 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட பைபிள் கண்வென்ஷனில் கலந்துக்கொண்டார்.

28 ➢ செருப்பாலூர் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்

29 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற School Board கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

# பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



அருட்தந்தை ஜெஸ்டின்
ஜூன் 01



அருட்தந்தை ஜெஸ்டின்
ஜூன் 01



அருட்தந்தை ரெஜின் ரதீஷ்
ஜூன் 09



அருட்தந்தை சுரேஷ் ஆன்றனி
ஜூன் 13



அருட்தந்தை
ஆன்றோ ஜெபின்
ஜூன் 13



அருட்தந்தை
ஜோணி ஆல்பிரட்
ஜூன் 24



அருட்தந்தை.
ஜோசப் பத்றோஸ்
ஜூன் 29



அருட்தந்தை
பிபின்
ஜூன் 29



## இம்மாதம் நினைவு கூர

ஜூன் 2023

1 – புனித ஜெஸ்டின்
2 – தங்க வெள்ளிக்கிழமை
4 – பெந்தக்கோஸ்துக்குப்பின் முதல் ஞாயிறு
கீவற்கீஸ் மார் திமோத்தியோஸ் ஆண்டகையின் நினைவு (2019)
5 – புனித போனிபஸ்
8 – புனித மரிய தெரசாள்
11 – பெந்தக்கோஸ்துக்குப்பின் இரண்டாம் ஞாயிறு
மார் பர்த்தலமேயு மற்றும் மார் பர்ணபாஸ்
மலங்கரை கத்தோலிக்க திரு ஆட்சி பீடம் நிறுவப்பட்ட நாள் (1932)
திருவனந்தபுரம் மறைமாநிலம் மற்றும்
திருவல்லா மறைமாவட்டம் உதயம் (1932)
13 – பதுவை நகரின் புனித அந்தோணியார்
14 – இறைவாக்கினர் எலிசா
15 – தூய இறைஅன்னையின் பெயரில் முதல் தேவாலயம்
நிறுவியதன் நினைவு
16 – திருத்தூதர் நோன்பு (பதிமூன்று நோன்பு தொடக்கம்)
திரு இருதய திருநாள் (இலத்தீன் முறை)
18 – பெந்தக்கோஸ்துக்குப்பின் மூன்றாம் ஞாயிறு
மார் எஃப்ரேம் மறைவல்லுநர்
19 – திருத்தூதர் புனித யுதா ததேயு
21 – புனித அலோஷியஸ் கொன்சாகோ
24 – ஸ்நாபக யோவானின் பிறப்பு
சேப்பாட்டு பிலிப்போஸ் ரம்பானின் நினைவு
25 – பெந்தக்கோஸ்துக்குப்பின் நான்காம் ஞாயிறு
குருமட தினம்
27 – யாக்கோபு மார் தியோஃபிலோஸ் ஆண்டகையின் நினைவு (1956)
28 – புனித ஐரேனியூஸ், சாமுவேல் மார் ஐரேனியூஸ்
ஆண்டகையின் பெயர்விழா
29 – திருத்தூதர்களான மார் பேதுரு, மார் பவுல்
திருத்தூதர் நோன்பு நிறைவு
தூய மரியன்னை மலங்கரை குருத்துவக் பயிற்சியகம் நிறுவப்பட்ட நாள் (1989)
யுஹானோன் மார் கிறிஸோஸ்டோம் மற்றும் யோசுவா மார்
இக்னாத்தியோஸ் ஆண்டகையரின் ஆயர் திருநிலைப்பாடு
வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகையின் பெயர்விழா
30 – பன்னிரு திருத்தூதர்கள்

13


19


21


24


30


## கோர்எப்பிஸ்கோப்பா பதவி பெயர் வழங்கும் நிகழ்வுகள்



## மேரிமக்கள் துறவற சபை



முதல் வார்த்தைப்பாடு



வார்த்தைப்பாடு புதுப்பித்தல்

## மார்த்தாண்டம் மறைமாவட்டம் சமூக சேவை மையம் (MIDS)



Carrier Guidence




நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

## Health for One Million



விழிப்புணர்வு கருத்தரங்கு

## MCA



பொதுநிலையினர் தினவிழா